அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 6

மாதிரித் தேர்வத்தாள்

| | |
|---|---|
| நேரம்: 120 மணித்துளிகள்<br><br>நாள்: சனிக்கிழமை | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>பக்கங்கள்: 12 |
| பெயர்: | |
| தமிழ்ப்பள்ளி: | |

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் உள்ள கட்டத்தினுள் புள்ளடி (×) இடுக.**

1. தமிழ்மொழியிலுள்ள உயிர்மெய் எழுத்துகள்
   - ☐ ஏழு ☐ பன்னிரண்டு ☐ இருநூற்றுப்பதினாறு

2. பண்பாட்டின் உயர்வைக் காட்டும் கூறு
   - ☐ வாணிகம் ☐ நாகரிகம் ☐ தொழில்

3. ஆசிரியர் - இச்சொல் காட்டும் இடம்
   - ☐ முன்னிலை ☐ தன்மை ☐ படர்க்கை

4. ஓசை நயத்தால் படிப்போர் மனதை எளிதில் ஈர்ப்பவை
   - ☐ கட்டுரை ☐ கவிதை ☐ நாவல்

5. நீச்சலில் திறவினை நிலைநாட்டிய ஈழத்தமிழன்
   - ☐ ஆழிக்குமரன் ஆனந்தன் ☐ குற்றாலீசுவரன் ☐ சிரித்திரன்

6. நிறம், சுவை, வடிவம், உணர்ச்சி போன்றவற்றின் பண்பைக் குறிக்கும் பெயர்
   - ☐ காலப்பெயர் ☐ குணப்பெயர் ☐ சினைப்பெயர்

7. வெளிச்சம் என்பதைக் குறிக்கும் சொல்
   - ☐ ஒலி ☐ ஒழி ☐ ஒளி

8. அம்மம்மாவின் தாயார் எனக்கு
   - ☐ பூட்டி ☐ பெரியம்மா ☐ பூட்டன்

9. பாம்பு, தொண்டு, கீழ்ப்படிதல் என்ற பலபொருள் குறிக்கும் ஒருசொல்
   - ☐ பணி ☐ வேலை ☐ கலை

10. பழம் + மரம் என்பதன் புணர்ச்சி வடிவம்
    - ☐ பழுமரம் ☐ பழமரம் ☐ பழம்மரம்

மாதிரித் தேர்வுத்தாள்

11. இயல் இசை நாடகம் என்பன

☐ முத்தமிழ் ☐ மூவிலக்கியம் ☐ முப்பொருள்

12. பூவின் மலர்ந்த நிலையைக் குறிப்பது

☐ அரும்பு ☐ மலர் ☐ வீ

13. வாழைக்கு இலை போல பனைக்கு

☐ கீற்று ☐ ஓலை ☐ தாள்

14. அஃறிணை ஒருமைச்சொல்

☐ பறவைகள் ☐ பறவை ☐ பறந்தன

15. திருக்குறள் ஓர்

☐ அறநூல் ☐ கலைநூல் ☐ சிற்பநூல்

(15X1=15புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. ஈழவன் அழகான ஓவியம் வரைகிறான்.
2. செங்கொடி இனிமையாகப் பாட்டுப் பாடுவாள்.
3. தேன்மொழி சுவையான உணவைச் சமைத்தாள்.

| இல | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9X1=9புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**3. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| முளையில் | குறுகுறு | சருகு |
| கதிரவனைக் | பண்பாட்டை | புலம்பெயர் |

1. இலக்கியங்களைக் கற்று எமது ______________________ அறிவோம்.

2. இலையின் காய்ந்த நிலை ______________________ எனப்படும்.

3. விளையும் பயிரை ______________________ தெரியும்.

4. குழந்தை எழுந்து ______________________ என நடந்தது.

5. பனி காலத்தில் ______________________ காண்பது அரிது.

6. ______________________ தமிழர் தமது அடையாளங்களைப் பேணுகின்றனர்.

(6X1=6புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. வரலாறு ______________________

2. சமையலறை ______________________

3. உறவினர் ______________________

4. வண்ணத்துப்பூச்சி ______________________

5. கனவு ______________________

(5X1=5புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**5. கீழ்க்காணும் வினாக்களில் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்மொழியின் சிறப்புகள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

2. தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

3. முற்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

4. நாம் உறவுகளுடன் தாய்மொழியில் பேசுவதால் ஏற்படும் பயன்களில் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

5. யார், ஏன், அவனோ இச்சொற்களில் வந்துள்ள வினா எழுத்துகள் எவை?

______________________________

______________________________

6. 'விளையாடினார்கள்' இச்சொல்லின் திணை, பால், இடம், காலம் என்பவற்றை எழுதுக.

திணை:______________ பால்:______________

இடம்:______________ காலம்:______________

7. ஒலி அளவின் அடிப்படையில் உயிரெழுத்துகளின் வகைகளை எழுதுக.

______________________________

______________________________

(5X2=10புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தாய்ப்பாலில் கலந்த மொழி
தரணியிலே சிறந்த மொழி
சேய் பருவ மழலையிலே
சிதைத்தாலும் பொறுத்த மொழி
காய் என்றும் கனி என்றும்
இலக்கணத்தைப் பகுத்த மொழி
தாயாகித் தமிழருக்குத் தன்
உதிரம் கொடுத்த மொழி.

நா.முத்துக்குமார்

1. தரணியிலே சிறந்த மொழி எது?

_______________________________________________

2. இலக்கணத்தை எப்படிப் பகுத்ததாகக் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

3. மொழியானது எப்பருவத்தினர் பேசும்போது சிதைகிறது என்று கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

4. கீழ்க்காணும் சொற்களின் பொருளை எழுதுக.

   1. சேய் ____________________ 2. உதிரம் ________________________

(5X1=5புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் பண்பாடு
2. இலையுதிர்காலம்

   **உள்ளடக்கக் குறிப்பு:**
   - மாதம்
   - குளிர் - காற்று - மழை - பனி
   - மரம் - செடி - கொடி

3. நீர் பார்த்து மகிழ்ந்த கலைவிழா

   **உள்ளடக்கக் குறிப்பு:**
   - தொடக்கம் - நிகழ்வுகள்
   - நிறைவு

(15புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் தேர்வுக்கான

# பகுதி – 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழர் மானத்தையும், வீரத்தையும் உயிராகப் போற்றி வாழ்வர். எந்த நிலை வந்தாலும் மானத்தை இழக்க மாட்டார்கள். தமிழர் தமிழினத்தின் மானத்தைக் காக்க வீரப்போர் புரிந்து தம் உயிரையும் கொடுத்துள்ளனர். இறந்தவர்களுக்கு நினைவுக்கல் எழுப்பும் மரபு உலகில் மிகத் தொன்மையானது. இம்மரபு தமிழர்களிடையே இருந்தமைக்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன. தமிழர் வீரத்தைக் கூறும் புறநானூறு இதனைப் பதிவு செய்துள்ளது. போரிலே வீரச்சாவடைந்த வீரருக்குத் தமிழர் நடுகல் அமைத்து வழிபட்டனர். இந்த நடுகற்கள் தமிழரின் வீரத்துக்குச் சான்றாகின்றன. இம்மரபு இன்றும் தொடர்கிறது. சிறிது காலத்திற்கு முன்னர் எமது தாயகத்திலும் போர்கள் நடைபெற்றன. வீரர்கள் பலர் வீரச்சாவு அடைந்தனர். அவர்கள் நினைவாக தமிழர்கள் ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் மாவீரர் நினைவைப் போற்றி நடுகல் வழிபாடு செய்து வருகின்றனர். இத்தகைய தமிழரின் வீரமரபு இன்று வரை சிறப்பாக பேணப்பட்டு வருகிறது.

1. தமிழர் எவற்றை உயிராகப் போற்றி வாழ்வர்?

______________________________

2. தமிழர் ஏன் வீரப்போர் புரிந்தனர்?

______________________________

3. தமிழர் யாருக்கு நடுகல் அமைத்து வழிபட்டனர்?

______________________________

4. தமிழர் வீரத்தைக் கூறும் நூல் எது?

______________________________

5. தமிழர் ஆண்டுதோறும் மாவீரரைப் போற்றி நடுகல் வழிபாடு செய்யும் மாதம் எது?

______________________________

(5X2=10புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் நாட்குறிப்பை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**மாறனின் நாட்குறிப்பு**

**நாள்:** 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை

**சிறப்பான நிகழ்வு:**

மாவீரர் கவிதைப்போட்டி இன்று நடைபெற்றது. நானும் எனது தங்கை சுடரினியும் இக்கவிதைப் போட்டியில் பங்குபற்றியிருந்தோம். அப்பாவும் அம்மாவும் எங்களை அழைத்துச் சென்றார்கள். நான் 'எனது தாயகம்' என்ற தலைப்பிலும், தங்கை 'மாவீரர் தியாகம்' என்ற தலைப்பிலும் கவிதை எழுதி, அதனைப் படித்தும் காட்டினோம். அவையோர் பாராட்டினார்கள். இந்நாள் மிக மகிழ்வான, மறக்கமுடியாத நாளாக அமைந்தது.

1. கவிதைப்போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ( )
2. கவிதைப்போட்டிக்கு மாறன் தனியாகச் சென்றார். ( )
3. 'எனது தாயகம்' என்ற தலைப்பில் கவிதை எழுதியவர் மாறன். ( )
4. மாறனை அவையோர் பாராட்டினார்கள். ( )
5. தரப்பட்டுள்ள நாட்குறிப்பை எழுதியவர் சுடரினி. ( )

(5X1=5புள்ளிகள்)

மாதிரித் தேர

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்